சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலகு – திருமதி. அ.பிரவீணா, தா/பெ. காலஞ்சென்ற திருமதி. அ.சாந்தி – கருணை அடிப்படையில் இளநிலை வருவாய் ஆய்வாளராகப் பணிநியமனம் செய்யப்பட்டது – பணியை வரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,
பணிகள் அலகு, பணி–9(2) பிரிவு

அரசாணை (3டி) எண்:82.

நாள்: 13.09.2022
சுபகிருது வருடம், ஆவணி–28,
திருவள்ளுவராண்டு 2053.

படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. கூடுதல் தலைமை செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் கடித எண்.ஆகு.4/16543/2019, நாள் 24.10.2020.

******

ஆணை:

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர், திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலகில், அலுவலக உதவியாளராகப் பணியாற்றிய போது காலஞ்சென்ற திருமதி.அ.சாந்தி என்பவர் (21.05.2018) இறந்த தேதியில், கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி விண்ணப்பம் அளித்த 01.06.2018 தேதியில் 21 வயதினைப் பூர்த்தி செய்துள்ளார் என்றும், விண்ணப்பம் அளிக்கப்பட்ட நாளில் உரிய கல்வித்தகுதியான 10–ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அரசாணை (நிலை) எண்.78, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 21.04.2017–ல், பத்தி 9–ல் இறந்த அரசு ஊழியரின் பெண் வாரிசுதாரர் கருணை அடிப்படையில் பணிகோரி விண்ணப்பிக்கும் போது திருமணம் ஆனவராக இருந்தாலும், அவரது விண்ணப்பத்தை ஏற்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் இந்நேர்வில் பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது என்றும், திருமதி அ.பிரவீணா என்பவருக்கு உரிய கல்வி, வயது மற்றும் வறியநிலைத் தகுதிகளின் அடிப்படையிலேயே பணிநியமனம் வழங்கப்பட்டுள்ளது என திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரின் அறிக்கையினை ஏற்று, தனியரின் பணியினை இளநிலை வருவாய் ஆய்வாளர் நிலையில், தனியர் பணியில் சேர்ந்த நாளான 14.11.2018 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசாணையினைப் பெற்றுத் தருமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் பரிந்துரை அரசளவில் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. திருச்சிராப்பள்ளி மாவட்ட வருவாய் அலகில் அலுவலக உதவியாளராகப் பணியாற்றியபோது காலஞ்சென்ற திருமதி.அ.சாந்தி என்பவரின் மகள் திருமதி.அ.பிரவீணா என்பவர் திருமணமான பின்பு கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளதால், அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020–ல் இறந்த அரசுப் பணியாளரின் திருமணமான பெண் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்க வழிவகை செய்யப்பட்டிருப்பினும், அதற்கேற்ப தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 15–ல் திருத்தம் மேற்கொள்ளப்படவில்லையாதலால், தனியர் பொருட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 58–இன் கீழ்

//த.பி.பா//

ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 15—ஐயும், தனியர் பணியில் சேர்ந்த நாள் முதல் பணப்பலன்கள் பெற தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 28 (2)—னையும் தளர்வு செய்து தனியர் திருமதி. அ.பிரவீணா என்பவர் பணியேற்ற நாளான 14.11.2018 முற்பகல் முதல் இளநிலை வருவாய் ஆய்வாளர் இனத்தில் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

3. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.3584/க்யூ—2/2021—1, நாள் 16.03.2021 மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.9298/ஜி2/2021—1, நாள் 01.04.2021—ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

குமார் ஜயந்த்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>
கூடுதல் தலைமைச் செயலாளர்/வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை—5.
மாவட்ட ஆட்சியர், திருச்சிராப்பள்ளி.
திருமதி.அ.பிரவீணா, இளநிலை வருவாய் ஆய்வாளர்,
(மாவட்ட ஆட்சியர், திருச்சிராப்பள்ளி மூலமாக)

<u>நகல்</u>
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை—9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை—9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை—9.
இருப்புக் கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

13/9/2022
பிரிவு அலுவலர்.
13/9/22

ந.க. அ3/16020/2018 நாள்: 18.10.2022

அசல் அனுப்பப்படுகிறது.

மாவட்ட ஆட்சியருக்காக,
திருச்சிராப்பள்ளி.

பெறுநர்:
திருமதி. அ. பிரவீணா,
இளநிலை வருவாய் ஆய்வாளர்,
ஆட்சியர் அலுவலகம்,
திருவெறும்பூர்.

18/10/2022